1972 மார்ச் 1972]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வேளாண்மைத் துறை படிப்பை இப்போது 10, 11 வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக 6-வது வகுப்பிலிருந்தே அந்தப் பயிற்சியைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 10, 11-வது வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையே சரியாகப் பின்பற்ற முடியவில்லை என்று சொல்கின்றபோது 6-வது வகுப்பிலிருந்து அந்தப் பயிற்சியைத் தொடங்குவது சாத்தியமல்ல. அப்படி 6-வது வகுப்பிலிருந்து பயிற்சி பெற மாணவர்கள் முன்வருவார்களானால், அதைத் தனியாகப் பரிசீலித்து மேற்கொள்ளலாம்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வேளாண்மைப் பயிற்சிக்குத் தனியாகப் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படுமா? இல்லையானால் வேறு தொழில் பயிற்சிப் பள்ளிகளோடு, வேளாண்மைப் பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் வலிவலம் பாலிடெக்னிக் பள்ளியில் விவசாயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இது வெற்றிபெற்றால் மற்ற இடங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தலாம்.

மேட்டுப்பாளையத்திலுள்ள நகரமன்ற உயர்நிலைப்பள்ளி

*** 525. வின திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரமன்ற ஆண்கள் உயர்நிலைப்பள்ளியினை, அரசு ஏற்கவேண்டுமென, நகரமன்றத்திலிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, 50 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட மேட்டுப்பாளையத்தில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள் குட்டிச் சுவர் போல் காட்சியளிக்கின்றன. நகராட்சியால் அதை சீர்படுத்த முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அரசாங்கம் அந்தப் பள்ளிகளை ஏற்று, பள்ளிக் கட்டடங்களை மாற்றியமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 17

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது கிட்டத்தட்ட 129 உயர்நிலைப்பள்ளிகளை நகராட்சிகள் நடத்திவருகின்றன. நகராட்சிகளுக்கு இருக்கின்ற நிதிப் பற்றாக்குறை காரணமாக, அந்தப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சிகள் கோரியுள்ளன. அந்தக் கோரிக்கையை அரசு இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் உடனடியாக எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்த அரசுக்கு நிதி போதாமையால், மிகவும் மோசமான நிலையிலிருக்கும் 25 பள்ளிகளை எடுத்துக் கொள்வதென்றும், அதில் 10 பள்ளிகளை உடனடியாக எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த 10 பள்ளிகளில் மேட்டுப்பாளையம் நகராட்சியிலுள்ள இரண்டு பள்ளிகளும் அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 526.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : This is a question concerning my constituency. Only one question, please.

MR. DEPUTY SPEAKER : You can put it in a personal way. அதற்கு ஒரு தனிக் கேள்வி போடலாமே.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, பல நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்து நடத்தப்போவதாகச் சொன்னார்கள். நிதிநிலை காரணமாக அருப்புக்கோட்டை நகராட்சி உயர்நிலைப் பள்ளியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பள்ளியையும் அரசாங்கம் உடனடியாக ஏற்று நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது மிகமிக நெருக்கடியான நிலையில் இருக்கக்கூடிய 25 பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்துவதாக இருக்கிறது. அந்த 25 பள்ளிகளும் மேட்டுப்பாளையம், இராசிபுரம், திருவண்ணாமலை, திருப்பூர், கோபிச்செட்டி பாளையம், வாலாஜாப் பேட்டை, பழனி, காரைக்குடி, குடியாத்தம், விருதுநகர், உடுமலைப்பேட்டை, இராமநாதபுரம், திருப்பத்தூர், காஞ்சிபுரம், தூத்துக்குடி, சிங்காரநல்லூர், திருவள்ளூர், சேலம் ஆகிய நகராட்சிகளைச் சேர்ந்தவை. அருப்புக்கோட்டை நகராட்சி இதில் சேரவில்லை. ஆகையால் அந்த நகராட்சி இந்த நகராட்சிகளை விட அதிக நிதி வசதி உடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திருத்தணிப் பகுதியிலுள்ள தெலுங்கு ஆசிரியர்கள்

*526. வினா. திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரு மொழிப் பிரதேசமான திருத்தணிப் பகுதியில் தெலுங்கு மொழி படித்த ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?